# பொருளாதாரத்தை ஈட்டுவதில்; பெண் கூலித்தொழிலாளர்கள் எதிர்நோக்கிய குடும்ப ரீதியான சவால்கள்: கொவிட்-19 காலத்தை மையப்படுத்திய கள ஆய்வு

# Family-based challenges faced by women wage workers in economic earnings: field research during COVID-19

M.R.F. Ahana

*Department of Arabic Language, South Eastern University of Sri Lanka*

*fathimaahana96@gmail.com*

***ABSTRACT***

*The Corona virus has affected around the world. Especially, it has impacted on the social, economic, educational domains widely. Therefore, the most of people face challenges in various aspects. At the same time, there are researches that deal with the women daily wage workers about economic issues. Unless there are lack of researches which discuss about the reasons behind the economic crisis. This research gap is taken as research problem. Thus, this research aims to identify the impacts behind women daily wage workers after COVID-19. The sample 20 women who are doing wage workings are selected from the research area Maruthamunai. It uses primary data and secondary data. Primary data were gathered through in-depth interview. They are analyzed by content analysis. The research finds that they faced difficulties in buying ingredients for the productions due to continuous curfew and unable to sale the products. These affected to lost their incomes and customers. They only could maintain to do some specific works.*

***Keywords:*** *COVID-19, Economic, Family problem, Wage workers, Daily wage*

**ஆய்வுச்சுருக்கம்**

*கொரோனா இன்று உலகம் முழுவதும் எல்லா சமூகங்களையும் பாதிக்க செய்துள்ளது. குறிப்பாக அதன் சமூக பொருளாதார கல்வி ஆகிய அனைத்துத் துறைகளிலும் அனைத்து சமூக நிறுவன கட்டமைப்புகளிலும் அதிக அளவில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இதனால் அதிகமான மக்கள் தங்களது வாழ்க்கையில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். கூலித் தொழிலில் ஈடுபடுகின்ற பெண்களை தனியாக ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வு செய்யக் கூடிய துறை சார்ந்த ஆய்வுகள் பொருளாதார துறை சார்ந்த ஆய்வுகளை அதிக அளவில் வெளிவருகின்றன. இருந்தாலும் சமூகவியல் ரீதியாக இத்தகைய பொருளாதார விளைவுகளுக்குப் பின்னணியில் உள்ள உண்மையான காரணங்களை ஆராய்ந்து முன்வைக்கின்ற ஆய்வுகள் மிகவும் அரிதாகவே இருக்கின்றன. எனவே இந்த இடைவெளியை என்பது ஒரு ஆய்வுக்குரிய பிரச்சினையாக இங்கு கருதப்படுகின்றது. இந்தப் பின்னணியில் கோவிட்க்குப் பின்னர் பெண்களின் கூலித் தொழிலில் ஏற்பட்டுள்ள விளைவுகளை கண்டறிவதை நோக்கமாக இவ்வாய்வு கொண்டுள்ளது. சமூக கலாசார பண்பாட்டு அடிப்படையாகக் கொண்டும் ஆய்வின் உடைய காலத்தை அடிப்படையாகக் கொண்டும் மிக அதிக அளவில் கூலித் தொழிலில் ஈடுபடுகின்ற ஒரு தனித்துவமான கிராமமாக மருதமுனை அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் சுமார் 360 குடும்பங்களில் கூலித் தொழிலில் ஈடுபடுகின்ற பெண்கள் காணப்படுகின்றார்கள் என்பதால் ஆய்வு மாதிரி இங்கு தெரிவுசெய்யப்படுகின்றது. இவர்களில் 20 பெண்கள் பண்பியல் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட இவ்வாய்வுக்கு தெரிவு செய்யப்படுகிறார்கள். இவ்வாய்வு*

*பிரதானமாக பண்பியல் ஆய்வை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இந்த வகையில் இந்த ஆய்வுக்கான தரவுகளை சேகரிப்பதற்காக முதல் நிலை தரவுகளும் இரண்டாம் நிலை தரவுகளும் ஆய்வுக்காக உள்ளெடுக்கப்படுகின்றன. முதல்நிலைத் தரவுகள் குறிப்பாக ஆழமான நேர்காணலின் ஊடாக குறிப்பிட்ட கூலித் பொருளாதாரத்தை ஈடுபடுகின்ற பெண்கள் ஆழமான நேர்காணல் ஊடான தரவு சேகரிப்பு நுட்பத்தின் அடிப்படையில் 20 பெண்கள் தெரிவு செய்யப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட தரவுகள் எண்ணக்கரு பகுப்பாய்வின் **(Content Analysis)** ஊடாக பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு தரவு முடிவுகள் எம்.எஸ். எக்ஸல் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வின் முடிவாக: தொடரான முடக்கம் காரணமாக உற்பத்திகளுக்கான மூலப் பொருட்களைப் பெறுவதில் சிரமங்கள் ஏற்பட்டது. அத்துடன் உற்பத்திகளை விற்பனை செய்யமுடியாத நிலை, ஆகியனவற்றால் வருமானங்களையும், அவர்களின் வாடிக்கையாளர்களையும் பெரும்பாலான பெண்கள் இழந்தனர். அதே போல், தொடர்கச்சியாக தொழில்புரிய முடியாத நிலை மனச் சிக்கல்களையும் ஏற்படுத்தியுள்ளது, இது அவர்களை தொழில்களை கைவிடுவதிலும் குறிப்பிட்ட சில தொழில்களை மட்டும் மேற்கொள்வதற்கு வழிவகுத்துள்ளது.*

***திறவுச்சொற்கள்:*** *கொவிட்-19, பொருளாதாரம், குடும்பப் பிரச்சினை, கூலித்தொழிலாளர்கள், தினக்கூலி*

---

### *1. அறிமுகம்*

*கொரோனா இன்று உலகம் முழுவதும் எல்லா சமூகங்களையும் பாதிக்க செய்துள்ளது. குறிப்பாக அதன் சமூக பொருளாதார கல்வி ஆகிய அனைத்துத் துறைகளிலும் அனைத்து சமூக நிறுவன கட்டமைப்புகளிலும் அதிக அளவில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இதனால் அதிகமான மக்கள் தங்களது வாழ்க்கையில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். குறிப்பாக பொருளாதார ரீதியாக நாளாந்த கூலி குறைந்த கூலிகளில் வேலை செய்கின்ற குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்கள் இத்தகைய நிலைமைகளால் மிகவும் நலிவடைந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமையும் அது அவர்களின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் ஆய்வுகள் முன்வைக்கின்றன. அந்த வகையில் பின்னர் ஏற்பட்ட இத்தகைய மோசமான தாக்கமானது பெண்களை கூலித் தொழிலில் ஈடுபடுகின்ற பெண்களையும் பாதித்துள்ளது. விருத்தி அடைந்த நாடுகளை விட விருத்தி அடைந்து வருகின்ற நாடுகளுடன் ஒப்பிடுகின்றபோது விருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் இத்தகைய பாதிப்புகள் அதிகமாக இருப்பதாக ஆய்வுகள் முன்வைக்கின்றன. குறிப்பாக வரலாற்று ரீதியாக நோக்கும் போது 2008 களில் உலகத்தில் ஏற்பட்ட உலக பொருளாதார பின்னடைவால் அது ஆண்களையும் அதிகாரம் செலுத்துகின்ற உற்பத்தி மற்றும் கட்டுமான துறைகளில் உள்ள துறைகள் உள்ள ஆண்களை விட பெண்களே அதிக அளவில் பாதித்த ஒரு நிகழ்வாகக் கருத முடியும். இருந்தாலும் இவற்றில் பெண்கள் தொழில்களை இழந்ததும் குறிப்பிடத்தக்கது. இருந்தபோதிலும் ஒப்பீட்டு ரீதியில் அவதானிக்கின்ற போது சமகாலத்தில் காணப்படுகின்ற கொவிட் பாதிப்பானது பெண்களின் பொருளாதாரத்தின் மீது மோசமான செல்வாக்கைச் செலுத்தி உள்ளதைக் காணமுடிகின்றது.*

2019, 2020களில் அதிக அளவிலான பெண்கள் தொழில்களை இழந்துள்ளனர். 66505 ஆண்களும் 20029 பெண்களும் வேலைகளை இழந்துள்ளனர். இங்கு இவை பட்டியலில் முறைசார் கூலித் தொழிலில் ஈடுபடுகின்ற நிரந்தரமான நிரந்தரமற்ற தொழில்களில் ஈடுபடுகின்ற பெண்கள் உள்ளடக்கப்படுகின்றார்கள். இத்தகைய பெண்களின் வீதாசாரம் ஆனது 61 சதவீதமாக காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக அடிப்படையாகக் கொண்ட கூலித் தொழிலில் ஈடுபடுகின்ற பெண்கள் பாரிய அளவில் இத்தகைய காரணமாக தீமைகளை எதிர் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. விருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகின்றபோது விருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் கூலித் தொழில்களில் சுமார் 432 மில்லியன் பெண்கள் ஊதியம் பெறுகின்ற வேலைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். ILO அறிக்கையின்படி 40% பெண்கள் கூலித் தொழில்களில் ஈடுபடுகின்றார்கள். குறிப்பாக அத்தியாவசியமான துறைகளில் அமைந்த தொழில் துறைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். மொத்த வியாபாரம், வர்த்தகம், விருந்தோம்பல் மற்றும் உணவு விநியோகம் சேவைகள் போன்றவை குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். இத்தகைய தொழில்களில் கொவிட் காரணமாக பல்வேறுபட்ட இழப்புகளை பெண்கள் சந்தித்துள்ளனர் என்பதை அவதானிக்க முடிகின்றது.

எனவே பொதுவாக நாங்கள் அவதானிக்கின்ற போது தென்னாசிய சமுதாயங்களில் 72 வீதமான பெண்கள் குறிப்பாக 46 மில்லியன் பெண்கள் இத்தகைய மிகக் குறுகிய காலத்தில் வேலைகளை இழந்;துள்ளமையும் தங்களது பொருளாதாரத்தை இழந்துள்ளமையும் அதனால் வருமானத்தை இழந்துள்ளமையும் இவை முன்வைக்கின்றன. இத்தகைய இழப்புகள் அவர்களை நலிவடைந்த பிரிவினர் ஆகவும் வறுமை கோட்டுக்கு கீழ் உட்படுத்த கூடியவர்களாகவும் மாற்று உள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இருந்த போதிலும் இத்தகைய கொவிட் தாக்கத்தின் காரணமாக முறைசார் பொருளாதாரங்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்கள் பெண்கள் மீதான கூலித் தொழிலில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்கள் ஆகியவை பெரும்பாலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தினாலும் ஒருசில கூலித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களின் மீது அது பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளமே ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இருந்தபோதிலும் ஒப்பீட்டு ரீதியில் பார்க்கின்றபோது பெண்களின் கூலித் பொருளாதாரங்களில் அவை பாரிய அளவில் எதிர் தாக்கங்களை ஏற்படுத்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்த வகையில் இவ்வாய்வினாது இவ்வாறு பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் அவதானிக்கின்ற போது, இலங்கை ஒரு விருத்தி அடைந்து வருகின்ற நாடு அத்தகைய நாட்டில் கொவிட் இனுடைய தாக்கம் பல்வேறு எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தி உள்ளது தகவல்கள் குறிப்பிடுகின்றன. இத்தகைய தகவல்களின் அடிப்படையில் ஆராய்கின்ற போது இலங்கையின சமூகத்தின் உள்ளடக்கத்தின் இத்தகைய கொவிட்டின் பாதிப்பானது கூலித் தொழிலில் ஈடுபடுகின்ற பெண்கள் எவ்வகையான தொழில் இழப்புக்களை, அவை எவ்வகையான தாக்கத்திற்கு உட்படுகின்றது என்பவை தொடர்பான ஆய்வுகள் இலங்கை அடிப்படையாகக் கொண்டு அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்ற போது மிகக் குறைவாக இருக்கின்றது. எனவே இந்த வகையில் இவ் ஆய்வானது இலங்கையில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற முஸ்லிம் சமூகத்தில் கூலித் பொருளாதார ஈடுபடுகின்ற பெண்கள் எத்தகைய சவால்களை எதிர்கொண்டார்கள் என்பது பற்றிய ஆய்வாக இவ்வாய்வு அமைகின்றது.

***2. ஆய்வு பிரச்சினை***

*பொதுவாக கூலித் தொழில்களில் ஈடுபடுகின்ற பொதுவாக உலக சமுதாயங்களில் பொருளாதாரத்தில் ஈடுபடுபவர்கள் என்கின்ற போது அது ஆண்களை அடிப்படையாகக் கொண்டுதான் நோக்கப்பட்டு வந்தது. இருந்தாலும் சமகாலங்களில் இவ்வாறான பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு 2009ஆம் ஆண்டு வரைக்கும் மிகக் குறுகிய காலத்தில் அதிகரித்து வந்தமையால் அத்தகைய வளர்ச்சிப்போக்கு பெண்களையும் பொருளாதாரம் தொடர்பான ஆய்வுகளில் உள்ளீர்த்துள்ளது. இந்தவகையில் உலக ஆராய்ச்சிகளில் அவதானிக்கின்ற போது இத்தகைய கூலித் பொருளாதாரத்தின் ஆண்களை விட பெண்களே அதிகளவில் ஈடுபட்டு வருகின்றார்கள். குறிப்பாக ஆசிய நாடுகள் ஆப்பிரிக்க நாடுகள் இவைகளில் கூலித் பொருளாதாரத்திலே அதிக அளவில் பெண்கள் ஈடுபடுகின்றார்கள். உதாரணமாக கிராமிய சமுதாயங்களில் காணப்படுகின்ற விவசாயத் துறைகளிலும் உணவு உற்பத்தித்துறைகளிலும் சுற்றுலாத்துறைகளிலும் பல பெண்கள் கூலித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். அதேநேரம் இத்தகைய முறை சாரா பொருளாதாரங்கள் வீட்டுடன் இணைந்த பொருளாதாரங்களாகவும் காணப்படுகின்றன. இத்தகைய ஒருங்கிணைந்த பொருளாதாரத்தில் ஈடுபடுகின்ற பெண்கள் அதிகமாக இருக்கின்றார்கள். இந்தவகையில் இலங்கையை அவதானிக்கின்ற போது இத்தகைய ஒரு தோற்றப்பாட்டை அண்மைக்காலமாக அவதானிக்க முடிகின்றது. இருந்தாலும் பெண்கள் மிகவும் கடினமான சூழ்நிலைகளில் பல்வேறு சமூக கலாசாரப் பின்னணி சவால்களை எதிர்கொண்டு இத்தகைய பொருளாதாரங்களில் ஈடுபட்டு வருகின்ற வளர்ச்சி அதிகரித்து வருகின்ற வேளையில் கொவிட் இன் தாக்கம் பாரியளவு வீழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளதை அவதானிக்க முடிகின்றது. இந்த வகையில் உலக நாடுகளில் பல்வேறு பட்ட ஆய்வுகளில் இத்தகைய பெண்களுடைய கூலித் தொழில் இழப்புகள் தொடர்பாகவும் அவர்களுடைய விளைவுகள் தொடர்பாகவும் அவர்களுடைய கூலித் தொழில் நிலைமைகள் தொடர்பாகவும் ஆய்வுகளை முன்வைக்கின்றன. ஆனாலும் இலங்கை போன்ற நாடுகளில் இத்தகைய -அறிவுக்கு எட்டிய வகையில்- இத்தகைய கூலித் தொழிலிலை மேற்கொள்ளும் பெண்களின் இழப்பு தொடர்பான பல்வேறுபட்ட நிதி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டாலும் அவை தொடர்பான ஒரு ஆய்வு ரீதியான கருத்துக்கள் குறைவாகவே முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே இத்தகைய இடைவெளியை நிரப்புவதன் நோக்கமாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. அதேபோல கூலித் தொழிலில் ஈடுபடுகின்ற பெண்களை தனியாக ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வு செய்யக் கூடிய துறை சார்ந்த ஆய்வுகள் பொருளாதார துறை சார்ந்த ஆய்வுகளை அதிக அளவில் வெளிவருகின்றன. இருந்தாலும் சமூகவியல் ரீதியாக இத்தகைய பொருளாதார விளைவுகளுக்குப் பின்னணியில் உள்ள உண்மையான காரணங்களை ஆராய்ந்து முன்வைக்கின்ற ஆய்வுகள் மிகவும் அரிதாகவே இருக்கின்றன. எனவே இந்த இடைவெளியை என்பது ஒரு ஆய்வுக்குரிய பிரச்சினையாக இங்கு கருதப்படுகின்றது. அதேபோல அண்மைக்காலமாக சமூக வலைத்தளங்களில் பெண்கள் பல்வேறுபட்ட பொருளாதார நெருக்கடிகள் எதிர்கொள்வது பற்றிய கதையாடல்கள் அதே மாதிரி தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இத்தகைய தகவல்களும் தரவுகளும் மிக முக்கியமாக ஆவணப்படுத்தப்பட வேண்டிய ஒரு விடயமாக இருக்கின்றது. அந்தவகையில் இந்த ஆய்வானது இத்தகைய விடயங்களை ஆராய்வதை முன்வைக்கின்றது. குறிப்பாக முஸ்லிம் சமூகங்களில் இலங்கை போன்ற பல்லின சமூகங்கள் வாழ்கின்ற முஸ்லிம்*

*சம்பவங்களிலும் கூலித் தொழில் முறை பல பெண்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இருந்தபோதிலும் இவ்வாறான கூலித் கூலித் தொழில் கொவிட் பின்னர் எந்த நிலைமையை அடைந்தது என்பது பற்றிய ஆராய்ச்சிகள் இதுவரைக்கும் வெளியிடப்படவில்லை. எனவே இந்தப் பின்னணியில் சமூகவியல் அணுகுமுறையின் அடிப்படையில் கூலித் தொழிலில் கொவிட்க்கு பின்னர் பெண்கள் எதிர்கொண்ட சவால்கள் அவருடைய பொருளாதார நிலைமைகள் பற்றி, என்ன நடந்தது, இந்த கூலித் கூலித் தொழிலின் தாக்கம் என்ன ஏற்பட்டது என்பது தொடர்பான விடயங்களை இவ்வாய்வு பிரச்சினையாக கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.*

***3. ஆய்வு நோக்கம்:***

*கோவிட்க்குப் பின்னர் பெண்களின் கூலித் தொழிலில் ஏற்பட்டுள்ள விளைவுகளை கண்டறிவதை நோக்கமாக இவ்வாய்வு கொண்டுள்ளது.*

***4. ஆய்வு முறையியல்:***

*இவ் ஆய்வை மேற்கொள்வதற்காக அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசம் தெரிவு செய்யப்பட்டது. குறிப்பாக இப்பிரதேசத்தில் இருபத்தி ஒரு பிரதேச செயலகங்கள் நிர்வாகப் பிரிவுகளைக் கொண்ட 21 செயலர் பிரிவுகளிலும் சுமார் 6 பிரதேச செயலகங்களில் முஸ்லிம்கள் தனித்துவமான கலாசார பண்பாட்டு அடையாளத்தோடு வாழ்கின்றார்கள். இத்தகைய பிரதேசங்களில் அதிக அளவிலான பெண்கள் சுமார் 1,345 பெண்கள் கூலித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள், இருந்தாலும்இவற்றைவிட இதன் அளவு அதிகமாக இருப்பதாக ஆய்வுகள் சொல்கின்றன. இருந்தபோதிலும் குறிப்பாக சம்மாந்துறை, மருதமுனை, பாலமுனை, ஒலுவில், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, கல்முனை, சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களை அவதானிக்கின்ற போது இத்தகைய கிராமங்களில் பெண்கள் கூலித் ஈடுபட்டு வருகின்றார்கள். சமூக கலாசார பண்பாட்டு அடிப்படையாகக் கொண்டும் ஆய்வின் உடைய காலத்தை அடிப்படையாகக் கொண்டும் மிக அதிக அளவில் கூலித் தொழிலில் ஈடுபடுகின்ற ஒரு தனித்துவமான கிராமமாக மருதமுனை அமைந்துள்ளது. எனவே இந்தப் பிரதேசம் இந்த ஆய்வுக்குரிய ஆய்வு மாதிரியை தெரிவு செய்வதற்கான பிரதேசமாக தெரிவு செய்யப்படுகின்றது. இந்தப் பிரதேசத்தை பொறுத்தவரைக்கும் பல்வேறுபட்ட குறிப்பாக இந்த நான்கு பிரதேசங்களும் முஸ்லிம்களை முஸ்லிம் பெண்களை கொண்டதாகவும் முஸ்லிம் கலாசார பொருளாதார அதிகளவில் நடுத்தர, வறிய மட்டத்தில் வாழ்கின்றவர்கள் அதிகளவில் ஈடுபட கூடியதாகவும் குறிப்பாக 8 பிரதான பகுதிகளில் கூலித் பொருளாதாரத்தை மேற்கொள்ளக் கூடியவர்களாகவும் இந்த பிரதேசத்தில் உள்ளவர்கள் இருக்கின்றார்கள். இந்த வகையில் இவற்றில் மிக அதிகமான எண்ணிக்கை உடையவர்களாக மருதமுனை பிரதேசம் இருப்பதனால் இந்த ஆய்வுக்காக மாதிரியை தெரிவுசெய்வதற்காக மருதமுனைப் பிரதேசம் தெரிவு செய்யப்படுகின்றது. மருதமுனை பிரதேசத்தில் சுமார் 360 குடும்பங்களில் கூலித் தொழிலில் ஈடுபடுகின்ற பெண்கள் காணப்படுகின்றார்கள் என்பதால் ஆய்வு மாதிரி இங்கு தெரிவுசெய்யப்படுகின்றது. இவர்களில் 20 பெண்கள் பண்பியல் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட இவ்வாய்வுக் தெரிவு செய்யப்படுகிறார்கள். இவ்வாய்வு பிரதானமாக பண்பியல் ஆய்வை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இந்த வகையில் இந்த ஆய்வுக்கான தரவுகளை சேகரிப்பதற்காக முதல்*

*நிலை தரவுகளும் இரண்டாம் நிலை தரவுகளும் ஆய்வுக்காக உள்ளெடுக்கப்படுகின்றன. முதல்நிலைத் தரவுகள் குறிப்பாக ஆழமான நேர்காணலின் ஊடாக குறிப்பிட்ட கூலித் பொருளாதாரத்தை ஈடுபடுகின்ற பெண்கள் ஆழமான நேர்காணல் ஊடான தரவு சேகரிப்பு நுட்பத்தின் அடிப்படையில் 20 பெண்கள் தெரிவு செய்யப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டது. இவ்வாய்வில் 22 பெண்கள் உள்வாங்கப்பட்டாலும் பெரும்பாலும் 20 பெண்கள் முழுமையாக இந்த ஆய்வுக்காக ஆதரவை வழங்கி இருந்தார்கள். அந்த அடிப்படையில் 20 பெண்களுடைய கருத்துக்கள் தகவல்கள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட தரவுகள் எண்ணக்கரு பகுப்பாய்வின் (Content Analysis) ஊடாக பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு தரவு முடிவுகள் எம்.எஸ். எக்ஸல் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.*

***5. பெறுபேறுகளும் கலந்துரையாடலும்***

*குடும்ப செலவீனங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ள வருமானம் ஈட்டுவது பிரதான அம்சமாக காணப்படுகின்றது. இதனால் பெரும்பான்மையான குடும்பங்களில் கணவன்மார் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு தங்கள் குடும்பத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்ற வழமை காணப்படுகின்றது. இலங்கையில் சனத்தொகையில் ஆண்களின் சனத்தொகையை விட பெண்களின் சனத்தொகை மிகவும் அதிகரித்து வருவதானது அவர்கள் பொருளாதாரத்தில் மென்மேலும் ஈடுபட காரணியாக அமைந்து இருக்கின்றது. இதனால், சில குடும்பங்களில் பெண்களும் வருமானம் ஈட்டுவதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர். இவ்வாறு, அவர்கள் கூலித் தொழிலில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் கொவிட்-19 பரவல் பொருளாதாரத்தைப் பெறுவதில் சிரமங்களை ஏற்படுத்தி இருந்தது. இந்தவகையில், கூலித் தொழிலில் பெண்களின் ஈடுபாட்டை ஆய்வுக்கு உட்படுத்தும் முகமாக இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.*

*இந்தவகையில், கூலித் தொழிலில் ஈடுபட்டு வந்த 20 பெண்கள் நோக்க மாதிரி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு கொவிட்-19 காலத்தில் அவர்களது கூலித் தொழிலில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆழமான கலந்துரையாடல் மூலம் விடயப் பகுப்பாய்வு (Content Analysis) செய்யப்பட்டுள்ளன.*

***5.1 கொவிட் -19 முன் பெண்கள் மேற்கொண்ட கூலித் தொழில்கள்***

*ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண்கள் கொவிட்-19 முன் மேற்கொண்ட கூலித் தொழில்களின் வகைகள், தொழில்களை மேற்கொண்ட காலஅளவு ஆகியன பற்றிய கலந்துரையாடலின் பெறுபேறாக அட்டவணை – 01 கிடைக்கப்பெற்றுள்ளது.*


ISBN: 978-624-5736-55-3

*அட்டவணை 01: கொவிட் -19 முன் பெண்கள் மேற்கொண்ட கூலித் தொழில்கள்*

| பெண்கள் | கொவிட்க்கு முன்னரான கூலித் தொழில் வகைகள் | கூலித் தொழில் வகைகளின் எண்ணிக்கை | கூலித் தொழில் செய்த காலம் (வருடங்கள்) |
|---|---|---|---|
| 1. | சமையல் ஓடர்கள்<br>கோழி, வாத்து, ஆடு வளர்த்தல் | 2 | 13 |
| 2. | கோழி வளர்ப்பு, நூல் சுற்றுதல் | 2 | 15 |
| 3. | நெசவு, சில்லறைக் கடை | 2 | 20 |
| 4. | தையல், கோழி வளர்ப்பு | 2 | 6 |
| 5. | நேசவு, இடியப்பம் விற்றல் | 2 | 7 |
| 6. | மரக்கறித் தோட்டம், நெசவு | 2 | 4 |
| 7. | ஊறுகாய் தயாரிப்பு, நெசவு | 2 | 2 |
| 8. | தையல், கோழி வளர்ப்பு, நூல் சுற்றுதல் | 3 | 1 |
| 9. | தொழில் செய்வதில்லை | - | - |
| 10. | நெசவு, கருவாடு விற்பனை | 2 | 10 |
| 11. | தையல், சாப்பாட்டுக் கடை | 2 | 4 |
| 12. | நெசவு, நூல் சுற்றுதல் | 2 | 6 |
| 13. | தொழில் செய்வதில்லை | - | - |
| 14. | தையல், கோழி வளர்ப்பு, நூல் சுற்றுதல் | 3 | 6 |
| 15. | நெசவு, நூல் சுற்றுதல்<br>கோழி, வாத்து, ஆடு வளர்த்தல் | 3 | 7 |
| 16. | சாப்பாட்டுக் கடை (காலை, இரவு) | 1 | 9 |
| 17. | கோழி வளர்ப்பு, நூல் சுற்றுதல்<br>தினக்கூலி வீட்டுவேலை | 3 | 4 |
| 18. | கோழி வளர்ப்பு, நெசவு | 2 | 3 |
| 19. | நூல் சுற்றுதல்<br>இனிப்புப் பண்டம் தயாரிப்பு<br>சாரிக்கு குஞ்சம் கட்டுதல் | 3 | 1 |
| 20. | கொச்சிகாய்த் தூள் அரைத்தல், நெசவு | 2 | 11 |

*ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண்கள் சமையல் ஓடர்கள், கோழி, வாத்து, ஆடு வளர்த்தல், கோழி வளர்ப்பு, நூல் சுற்றுதல், நெசவு, சில்லறைக் கடை, தையல், நெசவு, இடியப்பம் விற்றல், மரக்கறித் தோட்டம், ஊறுகாய் தயாரிப்பு, நூல் சுற்றுதல், கருவாடு விற்பனை, சாப்பாட்டுக் கடை, இனிப்புப் பண்டம் தயாரிப்பு, சாரிக்கு குஞ்சம் கட்டுதல், கொச்சிகாய்த் தூள் அரைத்தல் ஆகிய கூலித் தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். அதேவேளை, அவர்களில் 25 வீதமானவர்கள் மூன்று விதமான தொழில்களிலும், 60 வீதமானவர்கள் இரு தொழில்களிலும், 5 வீதமானவர்கள் ஒரு தொழிலிலும் ஈடுபட்டனர். அவர்களில் 10 வீதமானவர்கள் தொழில் செய்யாதவர்களாக (House Wife) இருந்தனர்.*

*இதனைத் தொடர்ந்து, அவர்கள் தொழில் செய்கின்ற கால அளவு பற்றி கலந்துரையாடிய போது 1-3 வருடங்கள் 20 வீதமானர்களும், 4-6 வருடங்கள் 30 வீதமானவர்களும், 7-10 வருடங்கள் 25*

*வீதமானவர்களும், 11-15 வருடங்கள் 10 வீதமானவர்களும், 16-20 வரை 5 வீதமானவர்களும் கூலித் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுள் 10 வீதமானவர்கள் தொழில் செய்வதில்லை.*

### *5.2 கொவிட் -19 பின் பெண்கள் மேற்கொண்ட கூலித் தொழில்கள்*

*இதனைத் தொடர்ந்து, கொவிட்-19 பின்னர் மேற்கூறப்பட்ட கூலித் தொழில்களில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பான விபரங்களைப் பற்றி ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண்கள் அட்டவணை-02 விளக்குகின்றது.*

*அட்டவணை 02: கொவிட் -19 பின் பெண்கள் மேற்கொண்ட கூலித் தொழில்கள்*

| பெண்கள் | கொவிட்க்கு முன்னரான கூலித் தொழில் வகைகள் | கூலித் தொழில் வகைகளின் எண்ணிக்கை | கொவிட்க்கு பின் கூலித் தொழில் வகைகளில் மாற்றம் இடம்பெறல் | கொவிட்க்கு பின்னரான கூலித் தொழில் வகைகள் | கூலித் தொழில் வகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| **1.** | சமையல் ஓடர்கள் மற்றும் கோழி, வாத்து, ஆடு வளர்த்தல் | 2 | தொழில் மாற்றம் நடை பெற்றுத | இரவுச் சாப்பாட்டுக் கடை, கருப்பட்டி தயாரிப்பு, குச்சி ஐஸ் தயாரிப்பு | 3 |
| **2.** | கோழி வளர்ப்பு, நூல் சுற்றுதல் | 2 | தொழில் மாற்றம் நடை பெற்றது | கோழி வளர்ப்பு, கடதாசிப் பை தயாரிப்பு | 2 |
| **3.** | நெசவு, சில்லறைக் கடை | 2 | தொழில் மாற்றம் நடை பெற்றது | சில்லறைக் கடை | 1 |
| **4.** | தையல், கோழி வளர்ப்பு | 2 | தொழில் மாற்றம் நடை பெற்றது | நடமாடும் சாப்பாட்டுக் கடை | 1 |
| **5.** | நெசவு, இடியப்பம் விற்றல் | 2 | தொழில் மாற்றம் நடை பெற்றது | நெசவு | 1 |
| **6.** | மரக்கறித் தோட்டம், நெசவு | 2 | தொழில் மாற்றம் நடை பெறவில்லை | தொழில் இன்மை | 0 |
| **7.** | ஊறுகாய் தயாரிப்பு, நெசவு | 2 | தொழில் மாற்றம் நடை பெற்றது | நூல் சுற்றுதல் | 1 |
| **8.** | தையல், கோழி வளர்ப்பு, நூல் சுற்றுதல், நெசவு | 4 | தொழில் மாற்றம் நடை பெற்றது | இடியப்பம் விற்றல் | 1 |
| **9.** | தொழில் செய்வதில்லை | - | - | தொழில் செய்வதில்லை | - |
| **10.** | நெசவு, கருவாடு விற்பனை | 2 | தொழில் மாற்றம் நடை பெறவில்லை | தொழில் இன்மை | 0 |
| **11.** | தையல், சாப்பாட்டுக் கடை | 2 | தொழில் மாற்றம் நடை பெற்றது | சாப்பாட்டுக் கடை | 1 |
| **12.** | நெசவு, நூல் சுற்றுதல் | 2 | தொழில் மாற்றம் நடை பெற்றது | நூல் சுற்றுதல் | 1 |


ISBN: 978-624-5736-55-3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | தொழில் செய்வதில்லை | - | - | தொழில் செய்வதில்லை | - |
| 14. | தையல், கோழி வளர்ப்பு, நூல் சுற்றுதல், நெசவு | 4 | தொழில் மாற்றம் நடை பெற்றது | கோழி வளர்ப்பு | 1 |
| 15. | நெசவு, கோழி, வாத்து, ஆடு வளர்த்தல் | 3 | தொழில் மாற்றம் நடை பெற்றது | கோழி, வாத்து, ஆடு வளர்த்தல் | 1 |
| 16. | சாப்பாட்டுக் கடை (காலை, இரவு) | 1 | தொழில் மாற்றம் நடை பெற்றது | இரவுச் சாப்பாட்டுக் கடை | 1 |
| 17. | கோழி வளர்ப்பு, நூல் சுற்றுதல் | 2 | தொழில் மாற்றம் நடை பெறவில்லை | தொழில் இன்மை | 0 |
| 18. | கோழி வளர்ப்பு, நெசவு | 2 | தொழில் மாற்றம் நடை பெறவில்லை | தொழில் இன்மை | 0 |
| 19. | நூல் சுற்றுதல், இனிப்புப் பண்டம் தயாரிப்பு, சாரிக்கு குஞ்சம் கட்டுதல் | 3 | தொழில் மாற்றம் நடை பெற்றது | நூல் சுற்றுதல் | 1 |
| 20. | கொச்சிகாய்த் தூள் அரைத்தல், நெசவு | 2 | தொழில் மாற்றம் நடை பெற்றது | கொச்சிகாய்த் தூள் அரைத்தல் | 1 |

*மேற்படி அட்டவணையின் படி, 70 வீதமானவர்களுடைய தொழில் வகைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ள அதேநேரம் 20 வீதமான பெண்களின் தொழில் வகைகளில் மாற்றங்களை ஏற்படவில்லை. 10 வீதமானவர்கள் தொழிலில் செய்வதில்லை. இந்தவகையில், கொவிட்-19 பின் ஏற்பட்ட தொழில் வகை மாற்றங்களாக கருப்பட்டி தயாரிப்பு, குச்சி ஐஸ் தயாரிப்பு, சில்லறைக் கடை, நடமாடும் சாப்பாட்டுக் கடை, கடதாசிப் பை தயாரிப்பு ஆகிய தொழில்களை அடையாளப்படுத்த முடிகின்றது.*

*ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண்களில் 10 வீதமானவர்கள் கொவிட்-19 முன்னர் 4 வகையான தொழில்களை செய்த அதேவேளை கொவிட்-19 பின்னர் ஒரு தொழிலை மேற்கொண்டனர். 10 வீதமானவர்கள் கொவிட்-19 முன்னர் 3 வகையான தொழிலை செய்து பின்னர் ஒரு தொழிலை செய்தனர். 30 வீதமானவர்கள் கொவிட்-19 முன்னர் இரு வகையான தொழிலை செய்து பின்னர் ஒரு தொழிலை செய்தனர். அதேநேரம், 25 வீதமானவர்கள் கொவிட்-19 முன்னர் இரு வகையான தொழிலை செய்து பின்னர் ஒரு தொழிலையேனும் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர். அவர்களுள் 5 வீதமானவர்கள் இரு வகையான தொழிலை செய்து பின்னரும் இரு தொழிலை செய்தனர். அவ்வாறே, 5 வீதமானவர்கள் ஒரு தொழிலை மேற்கொண்டு பின்னரும் ஒரு தொழிலை செய்தனர். இவர்களுள் 5 வீதமானர்கள் கொவிட்-19 முன்னர் இரு தொழில்களை செய்திருந்த போதிலும் பின்னர் 3 வகையான தொழில்களை செய்தனர். குறிப்பாக, இவர்களில் பெரும்பான்மையானவர்கள் கொவிட்-19 முன்னர் செய்ய கூலித் தொழில்களை விட வேறுபட்ட தொழில்களையே மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு உள்ளாக்கப்பட்டனர். இவர்கள் தங்களிடம் காணப்பட்ட அனுபவங்களை பயன்படுத்தியே இவ்வாறு புதிய தொழில்களை மேற்கொண்டனர். அதேவேளை, இவர்களில் சிலர் முன்னர் செய்த பல தொழில்களில் சிலதை விட்டு விட்டு ஓரிரு தொழில்களை மேற்கொண்டனர். இவர்களுள் 20 வீதமானவர்கள் கொவிட்-19*

*முன்னர் செய்த தொழில்களை பின்னர் செய்ய முடியாத நிலை ஏற்பட்டதால் எந்தவொரு தொழிலையும் செய்ய முடியாமல் இருந்தார்கள்.*

***5.3 கொவிட் -19 பின் பெண்கள் மேற்கொண்ட கூலித் தொழில்களுக்கான ஆதரவு***

*ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண்கள் கொவிட்-19 காலத்தில் தங்கள் கூலித் தொழிலில் ஈடுபட்ட போது அவர்களுக்கு பின்வருமாறு ஆதரவு கிடைக்கப்பெற்றமை கலந்துரையாடலின் மூலம் அடையாளப்படுத்தப்பட்டது.*

*1. கணவனின் முழு ஆதரவு கிடைத்தல்: 35 வீதமான பெண்களுக்குத் தங்களின் கணவர்மாரின் முழு ஆதரவும் கிடைக்கப்பெற்றது. இதனால் அவர்கள் கொவிட்-19 காலத்தில் தங்கள் தொழிலை தொடர்ந்து முன்னெடுக்க முடியுமாக இருந்தது என தெரிவித்தனர்.*

*2. கணவனின் பகுதியளவிலான ஆதரவு கிடைத்தமை: 25 வீதமான பெண்களுக்கு கணவன்மாரின் பகுதியளவிலான ஆதரவே கிடைக்கப்பெற்றது. இதனால் தொழிலை ஒரளவு திருப்தியுடன் செய்தமை.*

*3. கணவன் தனது மனைவி தொழில் ஈடுபடுவதை விரும்பாமை: 10 வீதமான பெண்களின் கணவன்மார் தங்கள் மனைவி தொழிலில் ஈடுபடுவதை விரும்பவில்லை.*

*4. பெண் சுய விரும்பில் தொழிலில் ஈடுபடுவதற்கு கணவன் விருப்பம் தெரிவித்தமை: 10 வீதமான பெண்களுக்கு தங்கள் கணவன்மார் தொழில்புரிய அனுமதி வழங்கினார்கள்.*

*5. பெண் சுயமாக விரும்பி தொழில் ஈடுபாடுகாட்டியமை: கணவனின் விருப்பு இன்றி, யாரின் அனுமதியும் இன்றி, குடும்பத் தலைவி என்ற நிலையில் 15 வீதமான கணவனை இழந்த பெண்களும், 5 வீதமான தலாக் கூறப்பட்ட பெண்களும் தொழில் புரிவதில் ஈடுபாடு காட்டினர்.*

***5.4 கொவிட் -19 பின் பெண்கள் மேற்கொண்ட கூலித் தொழில்களில் எதிர்கொண்ட சவால்கள்***

*பெண்கள் கொவிட் -19 காலத்தில் தங்கள் அடிப்படைத் தேவையை நிவர்த்தி செய்ய கூலித் தொழிலை மேற்கொள்வதில் எதிர் கொண்ட சவால்களை அடையாளப்படுத்த முனைந்த போது, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஒவ்வொரு பெண்களும் கொவிட் -19 காலத்தில் தங்கள் அடிப்படைத் தேவையை நிவர்த்தி செய்ய பல வகையான கூலித் தொழில் முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர். இவர்கள் ஒவ்வொருவரும் தொழில் முயற்சியில் ஈடுபடும் போது பல சவால்களை எதிர்கொண்டனர். அவை பின்வருமாறு அடையாளப்படுத்தப்பட்டன.*

***1. தொடரான முடக்கம் (Lockdown):***

*ஆய்வுக்குட்படுத்திய பெண்களின் முறைசார் தொழிலில் அவர்கள் தொடரான முடக்கத்தின் போது எதிர்கொண்ட சவாலாக வெளிச்சென்று பொருட்களை வாங்க முடியாமை அடையாளப்படுத்தப்பட்டது. இதனை 60 வீதமான பெண்கள் எதிர்கொண்டனர். இது பற்றி பெண்ணொருவர் குறிப்பிடுகையில்,*

*'.கடைத் தெருவுக்கு செல்வதற்குப் பயத்தினால், பொருட்களை வாங்;கி வருவதற்கு மகனை அனுப்பிய போது 'கடைகள் மூடப்பட்டுள்ளன எனவும், திறந்திருந்த கடைகளில் வாங்கச் சென்ற*

*பொருட்கள் இல்லை எனவும் தாமதமாக வந்து கூறினான்' இதன் போது குறித்த தேவையை நிவர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது'*

*அதேநேரம் முறை சாரா தொழில் முறையில் கடை வைத்து தொழில் செய்த 65 வீதமானர்கள் தங்களிடமிருந்த பொருட்களை விற்றே வருமானம் பெற்றனர். இதனால் வாடிக்கையாளர்களுக்குத் தேவையான பொருட்களை பெற்றுக்கொடுக்க முடியாத நிலையும், பல பொருட்கள் காலாவதி ஆகின்ற நிலையும் ஏற்பட்டது எனத் தெரிவித்தனர். இது பற்றி பாடசாலைக்கு முன்பாகவுள்ள சாப்பாட்டு கடை நடத்திவந்த பெண்ணொருவர் கூறும் போது,*

*'.......எங்களுடைய சாப்பாட்டுக் கடை பாடசாலைக்கு முன்பாக இருப்பதனால் மாணவர்களை மையப்படுத்தியே வியாபார நடவடிக்கையை மேற்கொண்டு வந்தோம். திடீரென்று ஏற்பட்ட கொவிட்-19 காரணமாக பாடசாலை மூடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து எங்களது வருமானம் முற்றாக இடை நிறுத்தப்பட்டது'.*

***2. பொருட்களுக்கான விலையேற்றமும் தட்டுப்பாடும்:***

*ஆய்வுக்குட்படுத்திய பெண்களில் 30 வீதமானவர்கள் கூலித் தொழிலில் பொருட்களுக்கான விலையேற்றம், தட்டுப்பாடு காரணமாக தொழிலை மேற்கொண்டு நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் சிரமங்களை எதிர்கொண்டனர். இதனைப்பற்றி, ஊறுகாய் தயாரிக்கும் பெண்ணொருவர் பொருட்களுக்கான விலையேற்றம், தட்டுப்பாடு குறித்து குறிப்பிடும் போது,*

*'நான் ஊறுகாய் தயாரித்து, பொதி செய்து கடைக்கு கொடுத்து சிறிதளவு வருமானத்தினை பெற்று வந்தேன். கொவிட்-19 காலப்பகுதியில் மரக்கறித் தட்டுப்பாட்டால் ஊறுகாய் தயாரிப்பதற்கான 5/= எலுமிச்சையை 25/= கொடுத்து வாங்கவேண்டி ஏற்பட்டது. இதனால் நான் செய்து வந்த தொழிலை கைவிட்டேன்'*

***3. குடும்ப செலவீனங்களின் அதிகரிப்பு:***

*ஆய்வுக்குட்படுத்திய பெண்கள் அனைவரும் இக்காலப்பகுதியில் குடும்ப செலவீன அதிகரிப்பால் கூலித் தொழில்களுக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் குடும்பத்திற்கு தேவையான செலவுகளை செய்வதில் பல சிரமங்களை எதிர்கொண்டனர். இது பற்றி பெண்ணொருவர் குறிப்பிடுகையில்,*

*'எனக்கு ஐந்து பிள்ளைகள். நான் இடியப்பம் விற்கும் வழமை கொண்டவள். இதனால், எனது பிள்ளைகளுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதிலும் பிள்ளைகளுக்கான கல்வி செயற்பாட்டை முன்னெடுப்பதிலும் பிரச்சினை ஏற்பட்டது. குறிப்பாக, பணம் செலவழிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் அதனை கொடுக்க முடியாத போது குடும்பத்திற்குள் சச்சரவுகள் ஏற்பட்டன.'*

***4. கொவிட்-19 தொற்றுக்குள்ளாகுதலும் சமூக புறக்கணிப்பும்:***

*மேற்கூறப்பட்ட பெண்களில் 15 வீதமானோர் கொவிட்-19 தாக்கத்திற்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து அவர்கள் அண்டை வீட்டார்களினால் தூரப்படுத்தி வைக்கப்பட்டனர். இதனால் அன்றாடத் தேவைகளை நிறைவேற்ற உதவிகளைப்*


ISBN: 978-624-5736-55-3

*பெறவும் முடியாமல் இருந்தது. இதனைப் பற்றி கொவிட்-19 தொற்றுக்குள்ளான கணவன் பற்றியும் தனிமைப்படுத்தல் பற்றியும் பெண்ணொருவர் குறிப்பிடும் போது,*

*'எனது கணவர் மீன் வாங்க கடற்கரைக்குச் சென்ற போது, அங்கு நடமாடியவர்களுக்கு அன்டிஜன் எடுத்துக் கொண்டிருந்த வேளை எனது கணவருக்கும் அன்டிஜன் எடுக்கப்பட்டது. இதன் போது அது பொஸிட்டிவ் என அறியப்பட்ட போது எனது குடும்பம் தனிமைப்படுத்தப்பட்டது. இதனால் ஏனையவர்கள் எங்களுக்கு உதவ முன்வரவில்லை. நாங்கள் இந்த நாட்களை பெரும் சிரமத்துடனேயே கழித்தோம். எங்களுக்கு உணவுப் பொருட்கள் கயிற்றைக் கட்டியே வீட்டிற்கு அனுப்புவர். இதன்போது நாங்கள் பெரும் மன உளைச்சலுடனேயே அந்த நாட்களை கழித்து வந்தோம்.'*

***5. கடன் பெற்றுக் கொள்ள முடியாத நிலை:***

*ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண்களின் 90 வீதமானவர்கள் கூலித் தொழில்களில் ஈடுபட்டு வந்தமையால், அவர்களுக்கு பணத்தட்டுப்பாடு ஏற்படுகின்ற போது அவர்கள் தங்கள் உறவினர்களின் பணம் பெற்று அதனை மீளவும் கொடுக்கும் வழமை காணப்பட்டதாக தெரிவித்தனர். எனினும் கொவிட்-19 காரணமாக பிறரிடம் பணம் பெற எத்தணித்த போதும் 70 வீதமானவர்கள் பணம் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலை காணப்படவில்லை எனக் கூறினர். இதனைப் பற்றி தலாக் சொல்லப்பட்ட பெண்ணொருவர் குறிப்பிடும் போது,*

*'நான் தைத்து சம்பாதிக்கிற பணத்தை நம்பி தான் என்ட பிள்ளைகள் வாழ்கின்றார்கள். அதுவும் தொடராக பணம் பெற முடியாத நிலையே காணப்பட்டது. இதற்கிடையில் கொவிட்-19 காலப்பகுதியில் எனக்கு சுகமில்லாமல் ஆகி என்னை வைத்தியசாலையில் தங்கவைக்கின்றார்கள். இதன்போது, என்னுடைய பிள்ளைகளை கவனிக்கவும் யாருமில்லை என்ற எண்ணம் என்ட வாழ்க்கை மீதான விரக்தி நிலையை ஏற்படுத்தி விட்டது. அப்போது தான் கடன்பட வேண்டிய நிலை உருவாகினாலும் அதனை யாரிடம் பெற்றுக் கொள்வது என்பது அறியாமல் தவித்தேன்.'*

***6. கொவிட்-19 காலத்தில் திடீரென்று ஏற்பட்ட உடல் உபாதைகள்:***

*ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண்களில் 40 வீதமானவர்கள் திடீர் உபாதை காரணமாக தங்களது தொழிலை முன்னெடுக்க முடியாத நிலை காணப்பட்டது. இதனைப் பற்றி சில்லறைக் கடை நடத்தி வந்த பெண்ணொருவர் குறிப்பிடும் போது,*

*'நான் சில்லறைக் கடை ஒன்றை வைத்து தொழில் செய்து கொண்டு வந்தேன். கொவிட்-19 காலத்தில் திடீரென்று ஒருநாள் உயர் குருதி அமுக்கம் ஏற்பட்டு நரம்பு வெடித்து இரத்தம் சிந்திய நிலையில் நான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன். இதன்போது அரசாங்க வைத்தியசாலையில் கொவிட்-19 சிகிச்சைகளில் காணப்பட்ட இழுபறி நிலைகளால் நான் எங்களது வீட்டை விற்று சுமார் 28 இலட்சத்திற்கு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றேன். இதன்போது, எனது குடும்பம் வாடகை வீட்டில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இக்காலத்தில் நானும் எனது குடும்பமும் தொழில் மூலமான வருமானம் இல்லாமல் வீடு விற்ற பணத்தை வைத்தே செலவழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.'*

*அவ்வாறே, கூலித் தொழில்களில் முழுமையாக ஈடுபட்டு வந்த பெண்ணொருவர் குறிப்பிடுகையில்,*

*'நான் கூலித் தொழில்களில் முழுமையாக ஈடுபட்டு வந்த போது, திடீரென ஏற்பட உயர் குருதி அமுக்கத்தினால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன். இதனால் எனது கணவரையும் சேர்த்து எனது ஐந்து பிள்ளைகளும் வருமானம் இன்றி பெரும் சிரமத்தை எதிர்கொண்டார்கள். இதன்போது அவர்களால் இந்த தொழில்களை முன்னெடுப்பதற்கான அனுபவம் இன்மையால் அவை கைவிடப்பட்டன. சுமார் ஒரு மாத காலமாக தொழில் செய்து வருமானம் பெற முடியாத நிலையால் எனது குடும்பம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டன.'*

***6. முடிவுரை***

*பெரும்பாலான பெண்கள் , கொவிட் -19 ன் முன்னர், ஒரே நேரத்தில் பல தொழில்களை மேற்கொண்டிருந்தனர். இருப்பனும், கொவிட்டிற்குப் பின்னர் இத்தகைய தொழில்களைக் கைவிட்டு ஒரு தொழிலை மட்டும் மேற்கொள்பவர்களாக அதிகமான பெண்கள் மாறியுள்ளனர். இவர்களில் சில குறிப்பிடத்தக்க பெண்கள் முழுமையாக தொழில்களை கைவிட்டுள்ளமையையும், சிலர் புதிய தொழில்களை தெரிவு செய்துள்ளமையையும் இவ்வாய்வு முன்வைக்கின்றது.*

*அதே போல, தொடரான முடக்கம் காரணமாக உற்பத்திகளுக்கான மூலப் பொருட்களைப் பெறுவதில் சிரமங்கள் ஏற்பட்டது. அத்துடன் உற்பத்திகளை விற்பனை செய்யமுடியாத நிலை, ஆகியனவற்றால் வருமானங்களையும், அவர்களின் வாடிக்கையாளர்களையும் பெரும்பாலான பெண்கள் இழந்தனர். அதே போல், தொடர்கச்சியாக தொழில்புரியமுடியாத நிலை மனச் சிக்கல்களையும் ஏற்படுத்தியுள்ளது, இது அவர்களை தொழில்களை கைவிடுவதிலும் குறிப்பிட்ட சில தொழில்களை மட்டும் மேற்கொள்வதற்கு வழிவகுத்துள்ளது.*

*மேலும், அதிகமான பெண்கள் பொருட்களின் விலை ஏற்றம் , பொருட்களின்; தட்டுப்பாடு ஆகியவற்றால் அதிக முதலீட்டை மேற்கொள்ளவேண்டியும், அதிக விலையில் உற்பத்திகளை விற்பனை செய்யவேண்டியும் ஏற்பட்டது. இதனால் வாடிக்கையாளர்கள் அவற்றை வாங்குவிதில் பின்வாங்கினர். இது தொழில்ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்தியது.*

*அதே போல, திடீரென ஏற்பட்ட கொவிட் -19 நோய்ப் பரவலால், அதிகமான பெண்களின் பொருள் உற்பத்திகளில் தேக்கம் ஏற்பட்டது. சிலருடைய பொருட்கள் வாடிக்கையாளர் இன்மையால் பழுதடைந்தது, இதனால் முதலீடுகள் பாதிக்கப்பட்டன. இது அவர்கள் தொடர்ந்தும் வியாபாரம் மேற்கொண்வதில் சிக்கல்களை ஏற்படுத்தியது. இருப்பினும், பெரும்பாலான பெண்கள் பல சவால்களை எதிர்கொண்டாலும் , அவற்றை நிர்வகித்து தொழிலை மேற்கொள்வதற்கான நிதியின்மை, கடன்களைப் பெற்று தொழிலை மேற்கொள்ள முடியாத சூழ்நிலைகளுக்குள் தள்ளியது. அதே போல் சில பெண்கள் அடிக்கடி நோய்களை எதிர்கெண்டிணயால்,; சிலரது தொழில்கள் முழுமையாகவும், பலரது தொழில்கள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டது. இருந்தபோதிலும் குறிப்பிடத்தக்க சில பெண்பகள் இத்தகைய அனைத்துத் தடைகளையும் தாண்டி தமது தொழிலைத் தொடர்ந்தும் மேற்கொண்டுள்ளனர்.*


ISBN: 978-624-5736-55-3

**References**

Alon M. Titan, Matthias Doepke, Jane Olmstead-Rumsey, and Michèle Tertilt, (2020). *The Impact of COVID-19 on Gender Equality. NBER Working Paper No. 26947*. Available at: Https://www.nber.org/papers/w26947

Anu Madgavkar, Mekala Krishnan, Olivia White, Deepa Mahajan, and Xavier Azcue. (2020). *COVID-19 and gender equality: Countering the regressive effects.* Available at: https://www.mckinsey.com/featured-insights/future-of-work/covid-19-and-gender-equalitycountering-the-regressive-effects

Anudinan Sudanthiranathan. (2020). Korōṉā kālamum varumāṉattiṟku mīṟiya celavīṉaṅkaḷum. [Corona Period and expenses over income]. Retrieved from: http://www.tamilmirror.lk.

Banerjee, M. And Sharma, M. (2020). *Impact of COVID-19 National Lockdown on Women Waste Workers in Delhi*. New Delhi: Institute of Social Studies Trust (ISST).

Chakraborty, Shiney. (2020). *Impact of COVID-19 National Lockdown on Women Informal Workers in Delhi. Institute of Social Studies Trust (ISST) Survey 2020, New Delhi, India.* Available at: https://www.isstindia.org/publications/1591186006_pub_compressed_ISST_-_Final_Impact_of_Covid_19_Lockdown_on_Women_Informal_Workers_Delhi.pdf

Committee for the Coordination of Statistical Activities. (2020). *How COVID-19is changing the world: A statistical perspective*. Https://unstats.un.org/unsd/ccsa/documents/covid19-report-ccsa.pdf

Department of Census & Statistics. (2020). *Quarterly report of the Sri Lanka labour force survey: Quarterly report—2020 first quarter*. Available at: http://www.statistics.gov.lk/labourforce/staticalinformation/quarterlyreports/1stquarter2020

Desai, Sonalde, Neerad Deshmukh, and Santanu Pramanik. (2021). *Precarity in a Time of Uncertainty: Gendered Employment Patterns during the COVID-19 Lockdown in India. Feminist Economics* 27(1–2). Available at: DOI: 10.1080/13545701.2021.1876903.

Faculty of Humanities and Social Sciences. (2020). COVID-19: The Socio-Economic Impact on Sri Lanka. Part-1: The Economic Impact of the COVID-19 Pandemic in Sri Lanka. Matara: University of Ruhuna.

François Gerard, Clément Imbert, and Kate Orkin. (2020). *Social Protection Response to the COVID-19 Crisis: Options for Developing Countries, Economics for Inclusive Prosperity*, Available at: https://econfip.org/policy-brief/ social-protection-response-to-the-covid-19-crisis-options-for-developingcountries/

Ashfa, M.A.F., Sana Anjum, M.J.F., Ijas Mohamed, A., Aqeela, M.M.F. & Zunoomy, M.S. (2021). Korōṉā toṟṟu kālattil tiṉakkūliyāḷarkaḷiṉ nilai: Koḻumpu - 12 Putukkaṭai piratēcattai maiyappaṭuttiya camūkaviyal āyvu [Daily wage workers in Covid-19 pandemic period: a sociological research based on Hulftsdorf, Colombo-12]. Muallim Journal of Social Sciences and Humanities, 5(4), 82-95. https://doi.org/10.33306/mjssh/163

Titus Lalith Antony P., Leslie Rani, Brundha M. P. & Jothi Priya. (2020). Problems Faced by Daily Labourers during COVID-19 Lockdown - A Questionnaire Survey. International Journal of Current Research and Review. Vol.12, Issue 19. pp.152-159.